
மின்னிதழ்
# தேசியம்
THESIYAM தேசியம்
www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
WELLA வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 93 | 28.06.2023 (புதன்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 8 | ஊக்குவிப்பு : ரூ.30.00

## சீனாவிற்கான கரும்புச் செய்கை வவுனியாவில் 72 ஆயிரம் ஏக்கர் நிலத்தை வழங்க ஜனாதிபதி அனுமதி!



பக்கம் 4

# யாழில் தகவல் அறியும் உரிமை சட்டத்தை கேலிக் கூத்தாக்கும் கல்வித்திணைக்களம்..!

தகவல் அறியும் உரிமை சட்டத்தில் தகவல் கோரி விண்ணப்பித்தவரிடம் கிராம அலுவலகர் ஊடாக வதிவிடத்தை உறுதிப்படுத்தும் ஆவணம், வாக்காளர் இடாப்பில் பிரித்தெடுக்கப்பட்ட பகுதி மற்றும் பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரியால் வழங்கப்படும் உரிய சான்றுப்பத்திரம் ஆகியவற்றை வழங்குமாறு யாழ். வலயப் பணிப்பாளராக கடமையில் இருந்த பொழுது மு.இராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

பக்கம் 4



பக்கம் 4

## வடக்கிற்கு மாத்திரமல்லாது அனைத்து மாகாண சபைகளுக்கும் அதிகாரப்பகிர்வு! ஜனாதிபதி உறுதி!



# இலங்கை தோற்றுப்போன அரசு! ஒப்புக்கொண்ட சந்திரிகா குமாரதுங்க! பாராட்டுகிறது நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்!



இலங்கையின் முன்னாள் அதிபர் சந்திரிகா குமாரதுங்க இலங்கை ஒரு தோற்றுப் போன அரசு என்று ஒப்புக் கொண்டிருப்பது முன்னெப்போதும் காணாத ஒப்புதலாகும். இந்த ஒப்புதலை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வரவேற்கிறது என பிரதமர் உருத்திரகுமாரன் தெரிவித்தார்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், இந்த உண்மையை வெளிப்படையாகச் சொன்னதற்காக முன்னாள் அதிபரைப் பாராட்டிய போதிலும், இந்தத் தோல்விக்கு ஊழலைக் காரணமாகக் காட்டியிருப்பதை மறுத்துரைக்கிறது.

தமிழர்களுக்கு எதிராக அரசின் நிறுவனமயமாக்கப்பட்ட இனப்பாகுபாடு பரவலாகவும் மற்றும் ஆழமாகவும் வேரூன்றி இருப்பதும், தமிழினவழிப்பும், தமிழர்களுக்கு எதிரான

பக்கம் 4

# தமிழர்களுடைய காணிகளை அபகரித்ததால் யுத்தம் செய்தேன்! : பிள்ளையான் ஆவேசம்!!



பக்கம் 4


தமிழ் மக்களுடைய காணிகளை பெரும்பான்மையினர் அபகரித்ததால் நான் விடுதலைப் புலிகளில் இருந்து யுத்தம் செய்தேன். இது நான் முதல் இருந்த நிலை பின்னர் நான் அரசியலுக்கு வந்தேன். எனவே அந்த மகாவலி திட்ட பகுதியில் மண் அகழ்வு மற்றும் சில விடையங்களை நிறுத்துமாறு பணிப்பாளருக்கு தெரிவிக்குமாறு மகாவலி அதிகாரிகளிடம் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் சிங்கள மொழியில் பேசி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. கலாமதி பத்மராஜா தலைமையில் மகாவலி மற்றும் மேச்சல்தரை தொடர்பான விசேட கூட்டம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை (25) இடம்பெற்றது.

இதன்போது தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவரும் மாவட்ட அபிவிருத்திகுழு தலைவருமான இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

இன்று நாட்டின் நிலமை என்ன? பொருளாதார நிலை என்ன? வெளிநாட்டு மக்கள் நிலை எவ்வாறு? என்ற விடயங்களை கதைக்க வேண்டும்.

## ஒட்டுமொத்த தமிழ் மக்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்படும்! ஜனாதிபதி உறுதி!!



வடக்கு-கிழக்கு பகுதிகளிலுள்ள தமிழ் மக்கள் மாத்திரமின்றி மலையகத்தில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பக்கம் 4

## அரசு படைகளின் சலுகைகளை அதிகரித்து வறிய மக்களின் உதவிகளை பறித்துள்ளது

### வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்!!



பக்கம் 4

ரணில் அரசாங்கம் நாட்டின் தேவைக்கு அதிகமாக இருக்கும் இராணுவ படைகளுக்கு வழங்கப்படும் சம்பளத்தை விட மேலதிக சலுகைகளை வழங்கி படைகளின் சம்பளத்தை மேலும் அதிகரித்துள்ளனர்.

யுத்தம் இல்லாத நாட்டில் பொருளாதாரம் மிக அதள பாதாளத்தில் விழ்ந்திருக்கும் போது வரவு செலவுத் திட்டத்தில் மிக அதிகமான நிதியை பாதுகாப்புச் செலவீனத்திற்காக ஒதுக்குவதுடன் அதற்கு மேலதிகமாக பல சலுகைகளையும் வழங்கியுள்ளனர் தமிழர் தாயகத்தில் குறிப்பாக யாழ் குடாநாட்டில் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் படைகள் நிலை நிறுத்தப்

## மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து பகுதிகளுக்குமான குடிநீர் விநியோகம் பூர்த்திசெய்யப்படும் :

### இராஜங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவிப்பு!



பக்கம் 4

எதிர்வரும் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து பகுதிகளுக்குமான குடிநீர் விநியோகம் பூர்த்திசெய்யப்படும் என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நீண்டகாலமாக குடிநீர் தேவையினை கோரிக்கையினை விடுத்துக்கொண்டிருந்த மட்டக்களப்பு ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மயிலம்பாவெளி பகுதியில் குடிநீர் இணைப்பு வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று காலை இடம்பெற்றது.

மயிலம்பாவெளி பகுதியில் குடிநீர் இணைப்பு இதுவரை

தமிழ் பேசும் மக்களின் தேசிய பத்திரிகை!



– ஐங்கரன் விக்கினேஸ்வரா–

# 'வாக்னர்'ஆயுத குழு சதிப்புரட்சியால் ரஷ்யாவில் புட்டின் ஆட்சி கவிழுமா ?

உலகம் முழுவதும் ஒரே ஒரு விஷயம் கடந்த சனிக்கிழமை காலை முதல் பரபரப்பான பேசுபொருளாக ஊடகங்களில், குறிப்பாக மேற்குலக ஊடகங்களில் அமைந்தது.
உண்மையில் இன்றைய ஊடகங்களில் அமையும் முக்கிய விடயம் ரஷ்யா தான். ஏற்கெனவே உக்ரைன் மீதான தாக்குதலின் காரணமாக ஒன்றரை ஆண்டுகளாக செய்திகளில் இருந்து கொண்டுதானே இருக்கிறது என எண்ணலாம். ரஷ்யா ஆம், இன்னமும் நெருக்கடியில்தான் இருக்கிறது.
மேற்குலக எண்ணத்தின் படி எப்படி முன்பு எப்படி சேட்டதோ, அதே பாணியில் இப்போது ரஷ்யாவை சிதைக்கும் திட்டத்தில் மேற்குலக ஊடகங்கள் முனைப்பாக உள்ளன.

## ரஷ்யாவில ஆட்சி கவிழ்ப்பு வரலாறு:

சோவியத் சிதைவின் பின்னர் இரண்டு முறை ஆட்சி கவிழ்ப்பை சந்தித்தது ரஷ்யா. ஆயினும் தற்போதய பிணக்குகள் பெலாரஸ் அதிபர் அலெக்சாண்டர் லுகாஷென்கோ உடன் ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டுள்ளதாக கூறியதைத் தொடர்ந்து, உயிரிழப்புகளைத் தவிர்ப்பதற்காக தனது படைகள் வெளியேறுவதாக வாக்னர் குழு தலைவர் தெரிவித்தார். இதனால் ஆயுத கிளர்ச்சி முடிவுக்கு வரவிருக்கிறது. வந்தும் விட்டதாக மாஸ்கோ தகவல்கள் கூறுகின்றன.
1991-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சோவியத் ரஷியா உடைவதற்கு முன், கம்யூனிஸ்ட் கட்சி, சோவியத் ரஷியா உருவாவதற்கு முக்கிய பங்கு வகித்த 15 குடியரசுகளுக்கு சுயாட்சி அதிகாரம் வழங்கும் அதிகார ஒப்பந்தத்தை தடுத்து அதிகாரத்தை கைப்பற்ற நினைத்த சதி முறியடிக்கப்பட்டது.
அதன்பின் இரண்டு வருடங்கள் கழித்து 1993-ம் ஆண்டு செப்டம்பர் 21-ந்தேதி முதல் அக்டோபர் 4-ந்தேதி வரை பாராளுமன்ற கிளர்ச்சி ஒன்றும் ஏற்பட்டது.

## மேற்கத்திய ஊடக பிரச்சாரம்:

ரஷ்ய விரோதப்போக்கு மேற்கத்திய ஊடக மனோபாவங்களில் ஊறி அது பரவி முழுமையாய் ஊறிப்போயுள்ளது. அதற்கு நேர் மாறாக அமெரிக்கா ஏதோ உலகிற்கு விடுதலை வாங்கித்தர வந்த மீட்பர்கள் போலவும் பல மேற்குலக ஊடகங்களும் தொடர்ந்து பல ஆண்டுகளாக பிரச்சாரம் செய்து வருவதையும் பார்க்கிறோம்.
கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் தொடங்கிய போர் இன்றும் நீடித்துவருகிறது. இந்தப் போரில் ரஷ்யா தொடர்ந்து மெதுவாக முன்னேறி வருவதாகச் சொல்லப்படுகிறது. இந்த நிலையில், தங்களைத் தனியார் ராணுவம் என அழைத்துக்கொள்ளும் 'வாக்னர் குழு' ரஷ்யாவுக்கு தலைவலியாக தற்போது மாறியிருக்கிறது என பல தகவல்கள் வெளிவந்துள்ளன.
இந்த வாக்னர் குழு கூலிப்படையாகவே மேற்குலக ஊடகங்களில் அறியப்படுகிறது. தற்போது ரஷ்யாவிற்கு மேலும் ஒரு நெருக்கடி கொடுத்து மீண்டும் புதிய கோணத்தில் பேசுபொருளாக்கியுள்ளது இந்த வாக்னர்ஆயுதக் குழு.

## வாக்னர் ஆயுதக் குழு பின்புலம்:

உக்ரைன், நோட்டா அமைப்புடன் இணைவது ரஷ்யாவுக்கு அச்சுறுத்தல் என ரஷ்யா எச்சரித்தும், உக்ரைன் நோட்டாவுடன் இணைவதில் உறுதியாக இருந்தது. இதனால், ரஷ்யா உக்ரைனுக்கு எதிரான போரைத் தொடங்கியது.
இப்போரில் வாக்னர் ஆயுதக் குழு உக்ரைனின் கிழக்குப் பகுதியில் ராணுவத் தாக்குதலின்போது பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. குறிப்பாக, கிழக்கு உக்ரைனின் பக்முத் பகுதி கைப்பற்றப்பட்டதில் வாக்னர் ஆயுதக் குழுவின் செயல்பாடுகளுக்கு அதிபர் புட்டினே பாராட்டுகளைத் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.
ரஷ்ய அதிபர் புட்டினுக்கு புதிய நெருக்கடியாக வலம் வரும் வாக்னர் ஆயுதக் குழுவின் ஏன் இன்றைய நெருக்கடிகளுக்கு தள்ளப்பட்டதன் பின்புலம் என்ன என்பதை இலகுவாக கணிக்க முடியாது.
தற்போது தமது 25,000 வீரர்கள் இறப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என ரஷ்யாவுக்குச் சவால்விடுவதாக வாக்னர் குழு பற்றி ஐரொப்பிய ஊடகங்களில் பரவலான தகவல்கள் வெளிவருகின்றன.

## யாரிந்த யெவ்ஜெனி பிரிகோஸின்:

இந்தக் குழு புட்டினின் தனிப்பட்ட ராணுவம் என்றும் கூட விமர்சனத்துக்குள்ளானது. உக்ரைன்-ரஷ்யப் போரில் ரஷ்யாவுக்காக வாக்னர் குழு சுமார் 30,000 பேரை பலி கொடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது. உக்ரைனின் பெரும்பகுதிகளை வாக்னர் குழுதான் கைப்பற்றி ரஷ்யாவிடம் ஒப்படைத்ததாகவும் தகவல்கள் முன்பு வெளியாகின.
வாக்னர் ஆயுதக் குழு என்பது ரஷ்யாவில் இயங்கிவரும் தனியார் ராணுவ ஒப்பந்த அமைப்பாகும். இது ஒருவித ஒப்பந்த படை என்றும் கூறலாம். ஏனெனில், ரஷ்யா மட்டுமல்லாது லிபியா, மாலி, சிரியா எனப் பல பகுதிகளிலும் உள்நாட்டுப் போரில் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரசாங்கத்துக்கு ஆதரவாக இந்தக் குழுவினர் இயங்குகின்றனர்.
ஆனால், உலகம் முழுவதும் இந்தக் குழு சட்டத்துக்கு அப்பாற்பட்டே செயல்படுகிறது என மற்றைய நாடுகள் தெரிவிக்கின்றன. ரஷ்யாவிலும் தனியார் ராணுவ ஒப்பந்தக்காரர்கள் சட்டபூர்வமாக தடை செய்யப்பட்டுள்ளனர். ஆனால், மறைமுகமாக அதிபர் புட்டினின் ஆதரவோடு, ராணுவத்தின் சம்மதத்தோடு தேவைப்படும் போது இந்தக் குழு இயக்கிக் கொள்ளப்படுகிறது என்பது வெளிப்படை.
முன்னாள் ரஷ்ய அதிகாரி டிமிட்ரி உக்டின் மற்றும் யெவ்ஜெனி பிரிகோஸின் (Yevgeny Prigozhin) என்ற புட்டினின் முன்னாள் தலைமை நிபுணரும் இணைந்து 2014-ல் இந்தப் படையை உருவாக்கினர். ஒரு மூர்க்கத்தனமான ஆயுதக் குழு என்றும், பக்முத்தில் வாக்னர் குழுவை இறக்கி தங்கள் படைகளுக்கு பெரும் சேதத்தை ரஷ்யா ஏற்படுத்தியதாக உக்ரைன் குற்றஞ்சாட்டி இருந்தது.
இவ்வாறாக இவர்களின் படைகள் உக்ரைன் மீதான தாக்குதல்களுக்கு பயன்படுத்தப்பட்டது.
இப்போது நடக்கும் போர் தொடங்குவதற்கு முன்னரே 2014 தொட்டு உக்ரைனில் அவ்வப்போது சிறு தாக்குதல்களை இவர்கள் நடத்தினர். குறிப்பாக, கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைக்கும் போரில் 'தி வாக்னர்' ஆயுதக் குழு பெரும் பங்காற்றியது.
2015-ல் தொடங்கி இந்த ஆயுதக் குழு சிரியா, லிபியா, ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளில் உள்நாட்டுக் கிளர்ச்சிகளில் அரசுக்கு ஆதரவாகப் பணியாற்றியுள்ளது. அதேபோல் சிரியாவின் தங்கச் சுரங்கங்களைப் பாதுகாக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளது என்பது அறிந்ததே.

## மாஸ்கோவில் சதிப்புரட்சி சாத்தியமா ?

மாஸ்கோவை விட்டு தனி விமானத்தில் அதிபர் புட்டின் வெளியேறினார் என்றும், ரஷ்ய ராணுவத்துடன் மோதத் துணிந்துள்ள வாக்னர் படையினர் மாஸ்கோ நோக்கி அணிவகுப்பதால் உள்நாட்டுப் போர் வெடிக்குமோ என்று அந்நாட்டு மக்கள் உச்சக்கட்ட பதற்றத்தில் இருக்கிறதாக அமெரிக்க, மேற்கு ஐரொப்பிய ஊடகங்கள் பரவலாக பிரச்சாரப் பாணியில் செய்திகளை வெளியிடுகின்றனர்.

> **உக்ரேனிய போரின் திருப்பு முனையாக உள்ளக சதி மூலம் அதிபர் புட்டினை வீழத்த மேற்குலகும் - அமெரிக்காவும் முயல்கின்றன. இதற்கு ஒத்து ஊதும் வண்ணம் மேற்கத்தய ஊடகங்கள் பல கற்பனைக் கதைகளை பரப்புவது சகஜம். மாஸ்கோவில் சதிப்புரட்சி சாத்தியமற்றதாகவும், ரஷ்ய அதிபர் புட்டினுக்கு ஏற்பட்ட நெருக்கடி தற்காலிகமானதாகவே தென்படுவதாகமாஸ்கோ ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.**

அத்துடன் ரஷ்ய அதிபர் புட்டின் சிறப்பு விமானத்தில் தலைநகர் மாஸ்கோவை விட்டு வெளியேறிவிட்டதாக சமூக வலைதளங்களில் பலரும் பதிவிட்டு வருகின்றனர். ரஷ்யாவில் அதிபர் புட்டினுக்கான சிறப்பு விமானமான Il-96-300PU விமானம் மாஸ்கோவில் இருந்து, அங்குள்ள நேரப்படி பிற்பகல் 2.16 மணியளவில் புறப்பட்டு வடமேற்குத் திசையில் சென்றுவிட்டதாக விமானங்களின் பாதையை பின்தொடரும் குடபைாவசுயனயச சேவை தரவுகளை சுட்டிக்காட்டி சிலர் பதிவிட்டுள்ளனர். இவை எல்லாம் சோடிக்கப்பட்ட செய்திகள் என மாஸ்கோ தகவல்கள் தெரிவிக்கின்றன.
மாஸ்கோவுக்கு வடமேற்கே உள்ள த்வெர் (Tver) நகருக்கு அருகே, புட்டின் பயணித்த சிறப்பு விமானம் அந்த கண்காணிப்பு கட்டமைப்பில் இருந்து மறைந்துவிட்டதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், அந்த சிறப்பு விமானத்தில் புதின் இருந்தாரா என்பதை உறுதிப்படுத்த எந்த ஆதாரமும் இல்லை.
அத்துடன் புட்டின் தலைநகர் மாஸ்கோவில் நிரந்தரமாக வசிப்பதில்லை, மாஸ்கோவுக்கு வடமேற்கே அமைந்துள்ள வால்டாய் ஏரியில் உள்ள தனது பரந்து விரிந்த இல்லத்தில் அதிக நேரத்தை செலவிடுவார் என்பதை உறுதிப்படுத்த முடியும்.

## புட்டினுக்கு எதிராக சதியா?

முதுகில் குத்தும் செயல் என்று புட்டின் எச்சரிக்கை விடுத்துள்ளார். ரஷ்யாவின் ராணுவத் தலைமைக்கு எதிராக வாக்னர் குழு போர்க் கொடி தூக்கிய பிறகு முதன் முறையாக ரஷ்ய அதிபர் புட்டின் பத்திரிகையாளர்களை சந்தித்துள்ளார்.
ரஷ்ய மக்களுக்கு அவர் ஆற்றிய உரையில், அனைத்து படைகளும் ஒருங்கிணைந்து இருக்க கேட்டுக் கொண்டுள்ளார். நடந்த நிகழ்வுகள் "ஒரு துரோகம்" என்றும் ரஷ்ய மக்களை முதுகில் குத்தும் செயல் என்றும் அவர் சாடியுள்ளார். இது முதுகில் குத்தும் செயல். இந்த மாதிரியான அச்சுறுத்தல்களில் இருந்து தேசத்தைக் காப்பதற்கான எங்களது நடவடிக்கை தீவிரமானதாக இருக்கும். துரோகப் பாதையில் இறங்கி தீவிரவாதத்தை கையில் எடுத்தவர்கள், நிச்சயம் தண்டனையை அனுபவிப்பார்கள். சட்டத்திற்கும் நாட்டு மக்களுக்கும் அவர்கள் பதில் சொல்வார்கள் என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.
ரஷ்யாவை அச்சுறுத்தும் இந்த மோசமான சூழலில் ரஷ்ய அரசு தரப்போ, வாக்னர் கூலிப் படை தலைவர் யெவ்ஜெனி பிரிகோஸினோ தங்களது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்க தயாராக இருப்பதாக தற்போது தெரியவில்லை.

## புதினுக்கு நேரடி சவால் பிரிகோஸின்?

புட்டினின் தொலைக்காட்சி உரைக்கு பதிலளித்துள்ள வாக்னர் தலைவர் யெவ்ஜெனி பிரிகோஸின் தனது நிலைப்பாட்டில் முதலில் உறுதி காட்டினார். தற்போது பெலரூஸ் நாட்டு நடுநிலைமையுடன் தற்போதய சிக்கல்களை பேசித்தீர்க்க முடிவெடுத்து உள்ளார.
ரஷ்ய அதிபர் புட்டினுக்கு எதிராக முறையாக நேரடியாக பிரிகோஸின் விடுக்கும் சவால் இது என்று நம்பப்படுகிறது. மிகவும் நெருக்கமான, அவருக்கு விசுவாசமான சகாவாக வலம் வந்த பிரிகோஸின், ரஷ்ய அதிபர் மாளிகையான கிரெம்ளின் சமையல் ஒப்பந்தங்களை பெற்றதன் மூலம் "புதினின் சமையல்காரர்" என்று வர்ணிக்கப்பட்டவர்.
இந்நிலையில், அதிபர் புட்டினின் ஆதரவோடு வளர்க்கப்பட்ட வாக்னர் குழு இன்று அவருக்கு எதிராகவே திரும்பியுள்ளது எனக் கூறப்பட்டாலும் மாஸ்கோவில் ஆட்சி மாற்றமோ அல்லது புட்டினை வீழ்த்துவது அரிதே என ஊகிக்கப்படுகிறது.
தற்போதய சிக்கலின் பின்னணி என்னவென்று பார்த்தால் ,உக்ரேனிய வலிந்த எதிர் தாக்குதல்கள் முறியடிப்பின் பின்னரே ஊடகங்களின் போராக வாக்னர் குழு பற்றிய தகவல்கள் வந்துள்ளன.
கடந்த வாரம் உக்ரேனிய போர் நிலவரத்தில், ரஷ்யாவின் நட்பு நாடான பெலாரசில்அணு ஆயுதங்களை நிலைநிறுத்தப்போவதாக ரஷ்ய அதிபர் புட்டின்தெரிவித்துள்ளதுடன், அதேவேளை மேற்குலக படைபல ஆதரவுடன் உக்ரேனிய வலிந்த எதிர் தாக்குதல்கள் ரஷ்யாவால் முறியடிக்கப்பட்டுள்ளதை மேற்குலக ஊடகங்கள் உறுதிப்படுத்தி உள்ளன.
உக்ரேனின் வலிந்த எதிர்த்தாக்குதல் முயற்சியின் போது ரஷ்ய படைகளின் முறியடிப்புத் தாக்குதல்களால் பல உக்ரேனிய தாங்கிகள் அழிக்கப்பட்டதைக் காட்டும் வீடியோப் பதிவுகள் மேற்கத்திய ஊடகங்களிலும் வெளியாகி உள்ளன.
ரஷ்ய பாதுகாப்பு அமைச்சக வீடியோவை முழுமையாக ஆதாரப்படுத்தி ஏற்காவிட்டாலும், உக்ரேனின் 186 டாங்கிகள், 418 கவச வாகனங்கள் இழந்ததை கீவ் தலைநகரம் மறைமுகமாக ஏற்றுக் கொண்டுள்ளது.

## 33 நாடுகளில் உக்ரைனிய வீரர்களுக்கு பயிற்சி:

கடந்த வருடம் பிப்ரவரி 24, 2022 அன்று, ரஷ்யா உக்ரைனில் ஒரு சிறப்பு இராணுவ நடவடிக்கையின் பின், டொனெட்ஸ்க் மற்றும் லுகான்ஸ்க் மக்கள் குடியரசுகள் உக்ரேனிய படைகளின் கோரமான தாக்குதல்களின் கீழ் வாழ்ந்து வந்த டான்பாஸ் பிராந்தியத்தை விடுவிக்கும் நோக்கில் ரஷ்யாவின் சிறப்பு நடவடிக்கை ஆரம்பமாகியது.
ரஷ்யா எல்லையில் உக்ரைன் கடந்த சில நாட்களாக உக்ரைன் வலிந்த எதிர் தாக்குதலை (Counter offensive) நடத்தியது. அதில் ரஷ்யா கைப்பற்றிய சில கிராமங்களை மீட்டுள்ளதாக முதலில் தகவல் வெளியிட்டனர்.
ஆயினும் ரஷ்யாவின் எதிர் தாக்குதலால் இப்போரில் உக்ரைனுக்கு இழப்பு அதிகம் என கூறப்பட்டுள்ளது. ஆக மொத்தமாக போரின் திருப்பு முனையாக உள்ளக சதி மூலம் அதிபர் புட்டினை வீழத்த மேற்குலகும்- அமெரிக்காவும் முயல்கின்றன. இதற்கு ஒத்து ஊதும் வண்ணம் மேற்கத்தய ஊடகங்கள் பல கற்பனைக் கதைகளை பரப்புவது சகஜம்.
ஆயினும் மாஸ்கோவில் சதிப்புரட்சி சாத்தியமற்றதாகவும், ரஷ்ய அதிபர் புட்டினுக்கு ஏற்பட்ட நெருக்கடி தற்காலிகமானதாகவே தென்படுவதாக மாஸ்கோ ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# ஒட்டுசுட்டான் ஓட்டு தொழிற்சாலைக்கு சரவணபவன் உட்பட்ட நிபுணத்துவ குழு திடீர் விஜயம்..!



ஒட்டுசுட்டான் ஓட்டு தொழிற்சாலையை மீள உருவாக்கம் செய்யது குறித்த தொழிறச்சாலையினை மீள இயங்க வைப்பதற்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் உட்பட்ட நிபுணத்துவ குழு நேற்றைய தினம்(27) ஒட்டுசுட்டான் ஓட்டு தொழிற்சாலைக்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், அரசியலை தாண்டி எமது இளைஞர் யுவதிகளது வேலைவாய்ப்பு தொடர்பில் சிந்திக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

அதன் அடிப்படையில் இந்த பிரதேச மக்கள் இந்த ஓட்டு தொழிற்சாலை இயங்குவதன் மூலம் தமக்கான வேலைவாய்ப்பு கிடைக்கும் என நம்புகின்றார்கள்.

இதனடிப்படையில் நேற்றைய தினம் 3 இயந்திரவியல் பொறியியலாளர்கள் 1 குடிசார் பொறியிலாளர், ஒட்டிசுட்டான் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி உட்பட நிபுணத்துவ குழுவுடன் அங்கு சென்று கலந்துரையாடிய நிலையில் அரசாங்க கூட்டுத்தாபனத்தின் கீழ் காணப்படுகின்ற நிலையில் இதற்கான சாத்தியகூற்று அறிக்கை ஒன்றை வரைந்து கைத்தொழில் அமைச்சருடன் கலந்துரையாட இருக்கின்றோம்.

பாரிய செயற்றிட்டங்களை மேற்கொள்ள வேண்டிய தேவையில்லை மிகவும் எளிதாக இதனை இயங்க வைக்க முடியும்.

இதன் மூலம் வடக்கின் பொருளாதார வளர்ச்சிக்கும் வேலைவாய்ப்பிற்கும் பாரிய பங்களிப்பினை ஏற்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்தார்.

தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!

SCAN ME

தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!
021 222 7557 /
+94 76 567 3339

# இலங்கையின் நல்லிணக்க நடவடிக்கைகளிற்கு கனடா தமிழர்கள் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கவேண்டும் – கனடா தூதரக அதிகாரி



இலங்கையின் நல்லிணக்க மற்றும் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் கனடாவில் உள்ள தமிழ் மக்கள் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கவேண்டும் என கனடாவிற்கான இலங்கை தூதரகம்வேண்டுகோள் விடுத்துள்ளது.

கனடாவின் ஸ்கார்புரோவில் உள்ள இந்து ஆலயத்தின் தேர்த்திருவிழாவில் கலந்து கொண்ட இலங்கை தூதரகஅதிகாரி இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

கனடாவின் மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநாகரசபை உறுப்பினர்கள் 1500க்கும் மேற்பட்ட பக்தர்கள் உட்பட பெருமளவானவர்கள் இந்த தேர்த்திருவிழாவில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய இலங்கை தூதரக அதிகாரி கனடாவில் உள்ள தமிழ்சமூகம் கனடாவின் பொருளாதாரம் மற்றும் கலாச்சாரத்தில் ஆற்றல்மிக்க சக்தியாக மாறியுள்ளது என தெரிவித்துள்ளார்.

கனடாவின் வலுவான தமிழ்வர்த்தக சமூகமும் மிகச்சிறப்பான கல்வியை கொண்டுள்ள இளம் தமிழ் தொழில்துறையினரும் கனடா சமூகத்திற்குள் தமிழ்மக்களை இணைப்பதற்கான உந்துசக்தியாக உள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அனைத்து சமூகத்தினருக்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்காக ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க தலைமையில் இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ள நல்லிணக்க பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் கனடா தமிழ் சமூகம் தனது ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கவேண்டும் என தூதரக அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டோருக்கான நீதியை உறுதிசெய்யுங்கள் : அரசிடம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தல்!




இலங்கை அரசு கொண்டிருக்கும் சர்வதேச கட்டுப்பாடுகளுக்கு அமைவாக சித்திரவதைகளால் பாதிக்கப்பட்ட தரப்பினர் நீதியைப் பெற்றுக் கொள்வதற்கும், அவர்கள் முகங்கொடுத்த அநீதியிலிருந்து முழுமையாக மீள்வதற்கு அவசியமான புனர்வாழ்வளித்தல் செயன்முறை உரியவாறு பூர்த்திசெய்யப்படுவதற்கும் அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டோருக்கான ஆதரவு தொடர்பான சர்வதேச தினத்தை (26) முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளது.

அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

சித்திரவதைகளிலிருந்து விலக்கீடு பெறுதல் என்பது எந்தவொரு சூழ்நிலையிலும் மட்டுப்படுத்தப்படமுடியாத மனித உரிமையாகும்.

இருப்பினும் இலங்கையிலும் உலகளாவிய ரீதியிலும் உளவியல் மற்றும் உடலியல் ரீதியான சித்திரவதைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

இந்த மிகமோசமான மனித உரிமை மீறலின் பாரதூரமான பின்விளைவுகளை சித்திரவதைக்கு உள்ளான தரப்பினர் மாத்திரமன்றி, அவர்களது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் நேரில் பார்த்த சாட்சியங்களும் அனுபவிக்க வேண்டியுள்ளது.

எனவே சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டோருக்கான ஆதரவு தொடர்பான சர்வதேச தினத்தில் (திங்கட்கிழமை) மேற்குறிப்பிட்டவாறு பாதிக்கப்பட்ட தரப்பினர், அவர்களது குடும்பத்தினர் மற்றும் சாட்சியங்களுக்கு அவசியமான ஆதரவு அனைத்து வழிகளிலும் வழங்கப்படுவதை உறுதிசெய்யவேண்டுமென மீள வலியுறுத்துகின்றோம்.

நாம் எமது விசாரணை செயன்முறையின் ஊடாக எமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ் சித்திரவதைகளால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான நியாயத்தையும், இழப்பீட்டையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றோம்.

இருப்பினும் பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் அவர்களின் குடும்பத்தாருக்கு இழப்பீட்டுக்கு அப்பால், அவர்கள் முழுமையாக மீள்வதற்கு அவசியமான உளவியல் ஆலோசனை வழங்கல் மற்றும் புனர்வாழ்வளித்தல் என்பன அவசியமாகின்றன.

அதேவேளை ஒடுக்குமுறைகள் தொடர்பான அச்சம் மற்றும் கடந்தகாலங்களில் பதிவாகியுள்ள தண்டனைகளிலிருந்து விலக்கீடு பெறும் போக்கு என்பவற்றின் காரணமாக சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்களும், சாட்சியங்களும் அநேக சந்தர்ப்பங்களில் நீதிக்கட்டமைப்பை அணுகுவதிலிருந்து விலகியிருக்கின்றனர்.

எனவே இலங்கை அரசு கொண்டிருக்கும் சர்வதேச கடப்பாடுகளுக்கு அமைவாக எவ்வித ஒடுக்குமுறைகளுமின்றி பாதிக்கப்பட்ட தரப்பினர் நீதியைப் பெற்றுக்கொள்வதற்கும், அவர்கள் முகங்கொடுத்த அநீதியிலிருந்து முழுமையாக மீள்வதற்கு அவசியமான புனர்வாழ்வளித்தல் செயன்முறை உரியவாறு பூர்த்திசெய்யப்படுவதற்கும் அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்துகின்றோம்.

அதுமாத்திரமன்றி பாதிக்கப்பட்ட தரப்பினருக்குரிய மருத்துவ, சட்ட, சமூக மற்றும் உளவியல்சார் உதவிகளை வழங்குவதை முன்னிறுத்தி சமூக நலனோம்பு அமைப்புக்கள், விசேட நிபுணர்கள், தனிநபர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயலாற்ற முன்வரவேண்டும் என்றும் சுட்டிக்காட்டுகின்றோம் என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அரச உத்தியோகத்தர்களிடையே இரத்ததான உணர்வை ஏற்படுத்த முனைய வேண்டும்! – வடக்கு ஆளுநர்

தாங்களாக முன்வந்து இரத்ததானம் செய்ய வேண்டும் என்ற விழிப்புணர்வு எங்களைப் பொறுத்தவரை குறைவாக இருப்பதாக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் குருதி கொடையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், தானங்களிலே சிறந்த தானம் இரத்த தானம். உடல் பாகங்களை தானம் செய்வது கண் தானம் செய்வது போன்ற பல்வேறு தானங்கள் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இரத்ததானம் வழங்குவதில் தற்பொழுது முழுமையாக நாங்கள் வளர்ச்சி பெறவிட்டாலும் முன்னேற்றமாக உள்ளது என்பது பலராலும் உணரப்பட்ட ஒரு விடயமாக காணப்படுகின்றது.

இருந்தபோதிலும் அதை முன்வந்து தானம் செய்ய வேண்டும் என்ற அந்த விழிப்புணர்வு எங்களைப் பொறுத்தவரை குறைவாக இருப்பது எல்லா இடங்களிலும் சுட்டிக்காட்டப்படுகின்ற ஒரு விடயமாக காணப்படுகின்றது.

இப்பொழுது பலர் அதற்கு ஆக்கமும் ஊக்கம் ளித்து தாங்களாக முன் வந்து இரத்த தானத்தை செய்து கொண்டிருக்கின்றார்கள். அவ்வாறு செயற்படும் நபர்களுக்கு நாங்கள் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

வடக்கு மாகாணத்திலே யுத்த காலத்தில் பல்வேறுபட்ட பிரச்சனைகளை நாங்கள் எதிர்நோக்கி இருந்தோம். யுத்த காலத்தில் இரத்தம் என்பது உயிர் காக்கும் ஒரு விடயமாக காணப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் நான் அரச அதிபராக இருந்தபோது யுத்தம் மற்றும் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரத்ததானம் வழங்குவதில் நாங்கள் இடர்பாடுகளை எதிர்நோக்கி இருந்தோம்.

அந்த காலத்தில் இரத்ததான விழிப்பு ணர்வை பல்வேறுபட்ட மட்டங்களில் மேற்கொண்டு இரத்த வங்கி மூலம் செயல்படுத்தி தான் பல உயிர்களை காப்பாற்றி இருந்தோம் எனவே இரத்த தானம் என்பது ஒரு முக்கியமான விடயமாக காணப்படுகின்றது.

மருத்துவர்கள் தமது சேவையை முழுமையாக நிறைவேற்ற வேண்டுமாக இருந்தால் எங்களைப் போன்றவர்கள் வைத்தியர்களுக்கு உதவுவதற்கு முன் வரவேண்டும். பொதுவாக நாங்கள் செய்கின்ற விடயம் அவர்களை சேவை செய்யும்படி கூறிவிட்டு குற்றச்சாட்டுகளை மாத்திரம் குறைகளை கூறுவதற்கு மாத்திரம் நாங்கள் இருப்பதாக கற்பனை செய்து கொள்கின்ற ஒரு விடயம் எங்களிடம் காணப்படுகின்றது.

அதை விடுத்து அவர்களோடு இணைந்து எமது சமூகப் பொறுப்புகளை உணர்ந்து சில விடயங்களை செய்ய வேண்டும். எனவே சமூகப் பொறுப்பினை நாங்களாகவே உணர்ந்து செயற்பட்ட இரத்த கொடையாளர்கள் இன்றைய தினம் கௌரவிக்கப்படுகின்றார்கள். எனவே இதே போல பல குருதிக்கொடையாளர்கள் எதிர்வரும் காலத்தில் உருவாக வேண்டும்.

அதேபோல மாகாண சபை ஆளுகைக்குட்பட்ட உத்தியோகத்தர்கள் அதேபோல் அரச உத்தியோகத்தர்களிடையே இரத்ததான உணர்வினை ஏற்படுத்த முனைய வேண்டும் என்றார்.

## யாழில் தகவல் அறியும்...

யாழ் கொக்குவில் இந்துக்கல்லூரி தொடர்பான சில தகவல்களை ஒருவர் கடந்த பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக யாழ்.வலயக் கல்வி பணிமனையில் கோரியுள்ளார்.

இதற்கு வலயக் கல்வி பணிமனையின் தகவல் அலுவலகருக்கு பதிலாக குறித்தளிக்கப்பட்ட அலுவலகரான யாழ்.வலயக் கல்வி பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் கையேழுத்திட்டு பதில் அனுப்பியுள்ளார்.

அதில், கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர், தகவல் கோரியவரின் கிராம அலுவலகர் ஊடாக வதிவிடத்தை உறுதிப்படுத்தும் ஆவணம், வாக்காளர் இடாப்பில் பிரித்தெடுக்கப்பட்ட பகுதி மற்றும் பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரியால் வழங்கப்படும் உரிய சான்றுப்பத்திரம் ஆகியவற்றை தனக்கு சமர்ப்பிக்குமாறு வலயக் கல்வி பணிப்பாளர் ஊடாக மாகாண கல்வி பணிப்பாளரிடம் கோரியுள்ளார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி தொடர்பிலான தகவல்களை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெற விரும்பின் கேட்கப்பட்ட ஆவணங்களை சமர்ப்பித்து தகவல்களை கோருமாறு குறிப்பிட்டுள்ளார்.

தகவல் அறியும் உரிமை சட்டம் நடைமுறைக்கு வந்து 6 ஆண்டுகள் முடிவடையும் நிலையில், சட்டம் தொடர்பில் வலயக் கல்வி பணிப்பாளருக்கோ அல்லது பாடசாலை அதிபருக்கோ அது தொடர்பில் விளக்கம் இல்லாது இருப்பதே இந்த பதிவின் மூலம் தெரிய வருகின்றது.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் பாகம் 5இல், தகவல் அலுவலர்களின் நியமனமும் தகவலுக்கு அணுக்கம் பெறுவதற்கான நடவடிக்கை முறையும் என்ற தலைப்பில் 24 (5) (ஈ) என்னும் உட்பிரிவில் தகவல் கோரிக்கையாளரை தொடர்பு கொள்வதற்கு அவசியமாக இருக்கக்கூடிய தகவல் தவிர, தகவல் தேவைப்படுவதற்கான ஏதேனும் காரணம் அல்லது வேறு ஏதேனும் தனிப்பட்ட விவரங்களை கொடுக்கும்படி தேவைப்படுத்தல் ஆகாது என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை தகவல் அறியும் உரிமை கோரிக்கை ஊடாக இலங்கை இராணுவத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைக்கு, கோரிக்கையாளரின் தேசிய அடையாள அட்டையை கிராம அலுவலர், பிரதேச செயலகத்திடம் உறுதிப்படுத்தி அனுப்புமாறு இராணுவம் கோரியத்தை தகவல் கோரிக்கையாளர் தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்து சவாலுக்கு உட்படுத்தியிருந்தார்.

அதன் போதான விசாரணையில், அவ்வாறு கோரக்கூடாது என்று ஆணைக்குழு இராணுவத்திற்கு பணிப்புரை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கிற்கு மாத்திரமல்லாது...

வடக்கு மாகாணசபைக்கு மாத்திரமல்லாது நாட்டிலுள்ள ஏனைய மாகாணசபைகளும் உள்ளடங்கலாக மேலதிக அதிகாரப் பரவலாக்கம் குறித்துப் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய விஜயத்தின் போது பிரான்ஸ் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் இன்று புதன்கிழமை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும். வேறுபட்ட தரப்பினருடன் விவாதங்கள் நடந்து வருகின்றன. வார இறுதியில் அவர்கள் அதை இறுதி செய்வார்கள். அது வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்திற்கு செல்லும்.

பின்னர் பொது நிதிக் குழுவிலும், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அது நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்படும். அதன்பிறகு, கடனாளிகளுடன் எஞ்சிய பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியும்.

கடனைத் திருப்பிச் செலுத்தும் காலத்தை நீடிப்பதற்கும், செலுத்த வேண்டிய தொகையை ஏதேனும் ஒரு வகையில் குறைப்பதற்கும் இலங்கை பரிசீலித்து வருகின்றது.

இதேநேரம் அரசியல் தீர்வு, அதிகார பரவலாக்கம் குறித்து தமிழ்த் தலைவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை சாதகமான முறையில் அணுகுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. ஜெனிவா கூட்டத் தொடரிலும் இவ் ஆணைக்குழுவின் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து இலங்கை தெளிவுபடுத்தியுள்ளது.

சர்வதேச கண்காணிப்பாளர்களின் பங்குபற்றலுடன் அந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். ஓகஸ்டில் இந்நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

குறிப்பாக தமிழ் அரசியல் தலைவர்கள் அரசியல் தீர்வு குறித்தும் அதிகார பரவலாக்கம் குறித்தும் கோரிக்கைகளை முன்வைத்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றனர்.அந்த கோரிக்கைகளை சாதகமான முறையில் அணுகுவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

எவ்வாறாயினும் ஏற்கனவே நடைமுறையிலுள்ள அரசியலமைப்பில் மாகாணசபைக்கு குறிப்பிட்டளவு அதிகார பகிர்வு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் வடக்கை பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ் அரசியல் தலைவர் மேலும் சில அதிகாரங்களைக் கோருகின்றனர்.

வடக்கு மாகாணசபைக்கு மாத்திரமல்லாது நாட்டிலுள்ள ஏனைய மாகாணசபைகளும் உள்ளடங்களாக மேலதிக அதிகார பரவலாக்கம் குறித்தும் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டு வருகிறது" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## சீனாவிற்கான கரும்புச் செய்கை...

சீனாவிற்கான கரும்புச் செய்கைக்காக வவுனியா மாவட்டத்தில் 30 ஆயிரம் ஏக்கர் நிலம் வழங்குவதற்கான அனுமதியை நேற்றைய அமைச்சரவை கூட்டத்தில் ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளார்.

இந்த அமைச்சரவைப் பத்திரத்தினை தேசிய முதலீட்டுச் சபையின் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவே அமைச்சரவைக்கு நேரடியாகச் சமர்ப்பித்தார்.

தாய்லாந்தில் பதிவு செய்யப்பட்ட சீனவின் முதலீட்டாளர்களின் ஓர் சீனி உற்பத்தி தொழிற்சாலையான sutech தொழிற்சாலையை வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் நயினாமடுவில் 492 ஏக்கர் அல்லது 200 கெக்டேயர் நிலப்பரப்பில் அமைக்கவும் அதற்கான சீனி உற்பத்திற்கு தேவையான கரும்புச் செய்கைக்கு 30 ஆயிரம் ஏக்கர் நிலம் முதல்கட்டமாக அந்த தொழிற்சாலைக்கு வழங்கவுமே அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேநேரம் இந்த தொழிற்சாலையின் கரும்புச் செய்கைக்கு வவுனியா மாவட்டத்தின் சகல பிரதேசங்களில் இருந்தும் நிலம் வழங்கப்படுவதோடு அயல் மாவட்டங்களிலும் உள்ளூர் உற்பத்தியாளர்களிற்கு என்னும் பெயரில் மேலும் 42 ஆயிரம் ஏக்கர் நிலம் வழங்கவும் அமைச்சரவைப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலும் செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவிலுமே அதிக நிலங்கள் வழங்கப்படவுள்ளதோடு அயல் மாவட்டமான முல்லைத்தீவிலும் குறிப்பிட்டளவு நிலம் இதற்குள் உள்வாங்கப்படவுள்ளது.

இந்தத் தொழிற்சாலைக்கான நில விநியோகம் தொடர்பிலேயே ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர்களில் ஒருவரான செல்வம் அடைக்கலநாதனும் ரெலோவின் பேச்சாளராள சுரேன் குருசாமியும் ஜனாதிபதியை தனியாகச் சந்தித்ததோடு, இந்த சீனி உற்பத்தி தொழிற்சாலைபிரதிநிதிகள், தேசிய முதலீட்டுச் சபையின் பிரதிநிதிகள் மற்றும் வவுனியா மாவட்ட அரச அதிபர் ஆகியோருடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மே 18ஆம் திகதி மேற்கொண்ட இரகசிய கலந்துரையாடலிலும் ரெலோவின் சுரேன் குருசாமியும் கலந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மக்களுடைய காணிக...

அரசியலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒரு பக்கமாக கருத்து தெரிவிக்கின்றனர்.

நான் புலிகளில் இருந்து வந்தனான் எங்களுடைய காணிகளை சிங்களவர்கள் அபகரித்ததால் யுத்தம் செய்தோம் இது நான் முதல் இருந்த நிலையை வைத்து இப்போது கதைக்க முடியாது பிரயோசனமில்லை அதனால் தான் நான் அரசியலுக்கு வந்தேன்.

எங்கள் மக்களை ஒரு பக்கம் சமப்படுத்தவும் மறுபக்கம் அரசாங்கத்தை சமப்படுத்த வேண்டும் அதற்காக இரு பகக்கமும் ஒன்றிணைந்து விசேடமாக ஜனாதிபதியுடன் கதைத்து பேசி நாட்டின் சட்டங்களை மாற்றவேண்டும். அதனை மாற்றுவதற்கு வேலை செய்யவேண்டும் இல்லாவிடில் வேலையில்லை.

நான் சண்டைபிடிக்க வரவில்லை கிழக்கில் யுத்தம் முடிந்த பின்னர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக அமெரிக்காவின் பண உதவியுடன் ஆடைத் தொழிற்சாலை மற்று சிஜசி பால்உற்பத்தி பண்ணைக்கு இடம் கொடுக்கப்பட்டது.

இந்த சிஜசி கம்பனி இப்போது என்ன செய்கிறார்கள் இப்போது வேலை செய்யவில்லை என்கின்றனர் இவர்களுக்கு வழங்கிய பணம் யாருடைய பணம் ? இவர்கள் அமெரிக்காவை ஏமாற்றி அரசாங்கத்தை ஏமாற்றி எங்களை ஏமாற்றினார்கள் உண்மையில் ஏழை மக்கள் பாவம் சிஜசி கம்பனி கள்வர்கள்.

நாட்டின் நிருவாக முறை மாற்றவேண்டும் என அறகலயினர் ஆர்ப்பாட்டம் செய்தனர் மகாவலி மாறியதா? ஆசிரியர்கள் மாறியதா? அரசியல் வாதிகள் மாறியதா? ரியூசன் ஆசிரியர் மாறியதா? வேலை இல்லையே, ?இவ்வாறு எதுவுமே மாற்றாமல் எல்லாத்தையும் சமனாக்கு என்றால் எப்படி சமனாகும்.

எனவே மாவட்ட நிருவாக அதிகாரிகள் அரசியல் நிருவாக அதிகாரிகள் கலந்துரையாடி எதிர்கால திட்டம் நாங்கள் என்ன செய்ய வேண்டும் நீங்கள் என்ன செய்வீர்கள் என்பதை யோசியுங்கள்.

1983 க்கு முன்னர் மகாவலி காணி இடம் தேவை எந்த இடம்வேண்டுமாயின் அதனை எடுக்க முடியும் அமைச்சருக்கு அது அந்த காலம் இப்ப எப்படி எனவே இந்த மகாவலி திட்ட பகுதியில் மண் அகழ்கின்றனர் இதை யார் அகழ்கின்றார்கள்? எனவே இவ்வாறன சில விடையங்களை நிறுத்துமாறு உங்கள் அமைச்சருக்கு உங்கள் பணிப்பாளரிடம் தெரிவியுங்கள் என அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்தின், நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரன் மகாவி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள். கமலநல அதிகாரிகள், விவசாயிகள் கால்நடை பண்ணையாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கிற்கு மாத்திரமல்லாது...

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய வம்சாவளிகளான மலையக மக்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக திடீரென நுவரெலியா மாவட்டத்தில் பெரும்பான்மையாக இருந்த சிங்கள மக்கள் அங்கு சிறுபான்மையினராகியுள்ளனர்.

அந்த தமிழ் மக்கள் வசிக்கும் பிரதேசங்களில் பொருளாதாரத்தை மேம்படுத்துவதுடன் அவர்களது சமூக முன்னேற்றம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் அவர்களால் அரசியலில் ஈடுபட முடிந்துள்ளதுடன் அரசின் அமைச்சரவையிலும் அங்கம் வகிக்கின்றனர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள அரசியல் தலைவர்களும் மக்களும் அரசமைப்பில் உள்ள அதிகார பரவலாக்கத்தை நடைமுறைப்படுத்துமாறு கோருகின்றனர்.

அரசமைப்பில் உள்ள விடயங்கள் தற்போதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அந்த விடயத்தில் அரசு எந்த விதத்திலும் தலையிடப் போவதில்லை. அதற்கான உத்தரவாதமும் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஏனைய சில அதிகாரங்களும் கோரப்படுகின்ற நிலையில் அந்த விடயம் குறித்து கலந்துரையாடப்படுகின்றது. என தெரிவித்துள்ளார்.

## அரசு படைகளின் சலுகைகளை...

பட்டுள்ளனர் இவர்கள் ஏன் எதற்கு நிறுத்தப்பட்டுள்ளனர் என்ற கேள்விக்கு சரியான பதில் இதுவரை அரசாங்கத்திடம் இல்லை.

இவ்வாறு படைகளுக்கு சலுகைகளை அதிகரித்த ரணில் அரசாங்கம் சாதாரண வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட சிறு உதவித் தொகைப் பணத்தையும் கியூ ஆர் என்ற முறைமையை கொண்டு வந்து பறித்துள்ளது.

வருமானம் குறைந்த குடும்பங்கள் பொருளாதார பின்னடைவின் பின்னர் மேலும் பாதிப்புக்கு உள்ளாகி உள்ள போது அவர்களுக்கான உதவு தொகை நிதியை மேலும் அதிகரித்து வழங்குவதற்கு பதிலாக ஏற்கனவே கொடுக்கப்படும் நிதியை பறிப்பது மிக மோசமான நடவடிக்கையாகும் எனவே படைகளுக்கு சலுகைகளை வழங்குவதை விட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவித் தொகையை தடையின்றி வழங்க அரசாங்கம் முன் வர வேண்டும்.

## மட்டக்களப்பு மாவட்டத்தின்...

கிடைக்கப்பெறாத பகுதிகளுக்கானசுமார் 2 கிலோமீட்டர் நீள குடிநீர் வழங்கும் நோக்கத்தின் அடிப்படையில் இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நீர்வழங்கல் அமைச்சர் ஜீவன் தொண்டமானிடம் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் மட்டக்களப்பு மாநகரசபை மற்றும் ஏறாவூர்ப்பற்று ஆகிய பகுதிகளில் 48 கிலோ மீற்றர் பகுதிகளுக்கு குடிநீர்வ ழுங்கவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்கீழ் மயிலம்பாவெளி காமாட்சி கிராமம் மற்றும் மைலம்பாவெளி பகுதி மக்களின் நன்மை கருதி குடிநீர் விநியோக திட்டம் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் நீர்வழங்கல் திணைக்கள அதிகாரிகள், கிராமசேவகர், கட்சியின் இணைப்பாளர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது அப்பகுதி மக்களுடன் அவர்களது பிரச்சனைகள் தொடர்பாக கலந்துரையாடியதுடன் அவர்களது கோரிக்கை கடிதங்களையும் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் உரையாற்றுகையில், நமது மாவட்டத்தில் மக்கள் நீண்ட காலமாக எதிர்நோக்கி இருக்கின்ற எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளில் குடிநீர் பிரச்சினையும் ஒன்று சுத்தமான குடிநீரை வழங்குகின்ற இச்செயற்றிட்டம் இப்பொழுது மாவட்டத்திலே குடிநீர் இணைப்பு இல்லாத இடங்களுக்கு இவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம்.

இந்த வருடம் அல்லது வருகின்ற வருடத்திற்குள் மாவட்டத்தில் குடிநீர் இணைப்பு வழங்கப்படாமல் இருக்கின்ற 55மூ பகுதிகளில் குடிநீர் இணைப்பை வழங்க வேண்டும்.

திராய்மடு தொடக்கம் புன்னைகுடா வரையிலான பதிகளுக்கான குடிநீர் இணைப்பு வழங்குவதற்கான செயல்திட்டத்தை ஆரம்பித்து அதற்கான விலை மனு கூறல் அழைப்பின் போது பொருளாதார பிரச்சனை போன்ற பல காரணங்களினால் பின் போடப்பட்டிருந்தது.

நமது மாவட்ட நீர்ப்பாசன முகாமையாளர் இத்திட்டத்தினை அமைச்சு மட்டத்தில் பேசி விரைவாக கொண்டு வர வேண்டும் என கூறியதற்கு அமைவாக அமைச்சராக இருக்கின்ற ஜீவன் தொண்டமான் அவர்களோடு இத்திட்டத்தினை விரைவாக ஆரம்பிக்க வேண்டும் என நான் கூறிய போது தங்களுக்கு அவர்கள் இந்த வேலை திட்டத்தினை விரைவாக ஆரம்பிப்பதற்கு உதவி புரிந்திருக்கின்றார். ஆகவே இந்த இடத்தில் அமைச்சர் ஜீவன் தொண்டமானவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

மாவட்டத்திலேயே குடிநீர் இணைப்புகள் இல்லாத இடங்களுக்கான நான் முன் வைத்திருக்கின்றேன் எதிர்வரும் நாட்களிலே நாங்கள் அந்த குடிநீர் இணைப்புகளை வழங்குவோம் இந்த வருடத்திலேயே வேகமாக செய்ய முடியும் ஆனால் நாட்டின் பொருளாதார பிரச்சினை உங்களுக்குத் தெரியும் அமைச்சுகளுக்கு பாரிய நிதி ஒதுக்கீடுகள் இல்லை.

என்னுடைய அமைச்சை எடுத்துக்கொண்டால் நிதி ஒதுக்கீடு ஐந்து வீதமும் இல்லை ஏனெனில் நாட்டின் பொருளாதார பிரச்சினை காரணமாக நிவாரண சிக்கல்களுக்கு முகம் கொடுத்திருக்கின்றது இருப்பினும் இருக்கின்ற வளங்களை வைத்துக் கொண்டுதான் நாங்கள் இப்பொழுது வேலை செய்கின்றோம்.

மட்டக்களப்பு மாவட்டத்திலே உன்னிச்சை குளத்திலிருந்து எடுக்கப்படுகின்ற தண்ணீர்தான் எங்களுக்கு தற்பொழுது வருகின்றது குளத்திலிருந்து ஒரு நாளைக்கு 4 கோடி லிட்டர் தண்ணீர் எடுக்கப்படுகின்றது இவை வவுனதீவில் சுத்திகரிக்கப்பட்டு சேமிக்கப்படுகின்றது.

மிகுதி 5ம் பக்கம் பார்க்க...

# நலன்புரித் திட்டத்தை பெற நிதி வசூலிப்பு – உடன் நிறுத்தவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.அரச அதிபருக்கு ஈ.பி.டி.பி வலியுறுத்து!




அரசாங்கத்தினால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வறிய மக்களின் வாழ்வாதார மீள் எழுச்சிக்கான சமூக நலன்புரி உதவித் திட்ட நடைமுறைகளில் பல்வேறு குழப்பங்கள் மற்றும் பாரபட்சங்கள் காணப்படுவதாக குற்றம் சாட்டும் மக்கள் குறித்த பட்டியலில் தமது பெயர் நீக்கப்பட்டமை தொடர்பில் ஆட்சேபனை செய்வதற்கான விண்ணப்பத்தை வழங்குவதில் கூட நிதி வசூலிப்பு மேற்கொள்ளப்படுவதாகவும் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்நிலையில் இவ்வாறான தவறுகளை நிவர்த்தி செய்வதுடன் குறித்த நிதி வசூலிப்பை உடன் நிறுத்தவதற்கான நடவடிக்கையையும் யாழ் மாவட்ட அரச அதிபர் எடுக்கவேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட உதவி நிர்வாக செயலாளரும் கட்சியின் ஊடக பேச்சாளருமான ஐயாத்துரை ஸ்ரீ ரங்கேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் நேற்றையதினம் (27) யாழ் ஊடக அமையத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய அவர் மேலும் கூறுகையில்,

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய குறித்த தரவுகள் பிரதேச செயலகங்களில் அண்மைக்காலத்தில் உள்வாங்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டமையால் மக்களுடனான தொடர்பும் அவர்களது குடும்ப நிலைமை தொடர்பான விபரங்களும் அவர்களுக்கு போதியளவில் இருந்திருக்கவில்லை என குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதனால் மக்களின் உண்மையான நிலைப்பாடும் தேவையானவர்களின் கோரிக்கையும் நிராகரிக்கப்பட்ட நிலை உருவாகியுள்ளது.

அதேவேளை தற்போது சமுர்த்தி பெறுகின்ற வறிய குடும்பங்கள் பலரது பெயர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் சமூக நலன்புரி நன்மைகள் சபையின் பயானாளி தெரிவுக்கு குறித்த திட்டத்தில் உள்வாங்கப்படாத மக்களை மேன்முறையீடு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

இதனால் தற்போது ஒவ்வொரு பிரதேச செயலகங்களின் முன்றலிலும் பல நூறு மக்கள் வரிசையில் காத்திருக்கும் நிலை உருவாகியுள்ளது.

இதனையடுத்து ஒன்லைன் (நிகழ்நிலை) முறை ஊடாக ஆட்சேபனைகளை விண்ணப்பிக்குமாறும் அதனை பிரதேச செயலகங்கள் கண்காணிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் குறித்த விண்ணப்பங்களை ஏற்பதில் பிரதேச செயலகங்களில் உள்ள வளப் பற்றாக்குறை மற்றும் இதர காரணங்களால் நிவர்த்தி செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளதால் தனியார் முகவர்கள் நிலையங்கள் இதனை மேற்கொள்வதில் அதிக கரிசனை காட்டிவருவதுடன் அதற்காக 300 ரூபா முதல் அதிக நிதி அறவீடு செய்யப்பட்டு வருவதாகவும் குறித்த விண்ணப்பத்தை விண்ணப்பிப்பதற்கே தாம் கடன் வாங்கும் நிலைக்கு தள்ளப்பட்டு வருவதாகவும் வறிய மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே வறிய மக்களுக்கான குறித்த திட்டத்தை மிக நேர்த்தியான முறையில் தேவையான பயனாளிகளுக்கு கிடைக்க வழிவகை செய்யும் வகையிலும் இவ்வாறான நிதி வசூலிப்புகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளையும் யாழ் மாவட்ட செயலகம் மேற்கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்லாது இவ்வாறான தவறான அல்லது மக்களின் தேவைகருதியதான தரவுகளை திரட்டும் போது அதனை துல்லியமாக குறைபாடுகள் மற்றும் தவறுகள் ஏற்படாதிருப்பதற்கு அரச அதிகாரிகள் அதிக அக்கறை காட்டவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சட்ட விரோதமாக குடியேறியுள்ளவர்கள் தொடர்பில் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு! கிழக்கு ஆளுநர் அதிகாரிகளுக்கு விடுத்துள்ள எச்சரிக்கை!!

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மயிலத்தமடு, மாதவனை பகுதியில் சட்ட விரோதமாக குடியேறியுள்ளவர்கள் தொடர்பில் நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவினை இரண்டு வாரங்களுக்குள் நிறைவேற்றுமாறு கிழக்கு மாகாண ஆளுனரும் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத்தலைவருமான செந்தில் தொண்டமான் மகாவலி அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகளுக்கு பணிப்புரைகளை வழங்கியுள்ளார்.

அதிகாரிகள் நீதிமன்ற உத்தரவினை மதித்து செயற்படவேண்டும் எனவும் இல்லாதுவிட்டால் நீதிமன்ற அவமதிப்பு என்ற நிலையினை எதிர்கொள்ள நேரிடும் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் இவ்வாண்டின் ஆணி மாதத்திற்கான அபிவிருத்தி குழு கூட்டம் நேற்று (27) திகதி மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் கலாமதி பத்மராஜா அவர்களது ஏற்பாட்டில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத்தலைவருமான செந்தில் தொண்டமான் பங்கேற்புடன் இடம்பெற்ற
மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



குறிப்பாக இம்மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் இவ்வாண்டு நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ள திட்டங்களுக்கான அனுமதியினை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

மேலும் இம்மாவட்டத்தின் விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம் (டெங்கு ஒழிப்பு), சுற்றாடல், மீன்பிடி உட்பட்ட அனைத்து திணைக்களங்கள் சார் விடயங்களும் விரிவாக ஆராயப்பட்டதுடன் அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக ஆளுநர் உடன் நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளை பணித்துள்ளார்.

குறித்த ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநரின் பணிக்குழுவினர் உள்ளிட்ட உயரதிகாரிகள், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சனி ஸ்ரீகாந்த், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.சசிகலா புண்ணியமூர்த்தி, உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்கள், செயலாளர்கள், மாவட்ட பொலிஸ் உயரதிகாரிகள், மற்றும் பிரதேச செயலாளர்கள், ஏனைய திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட திணைக்களங்கள் சார் உயரதிகாரிகள் என பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

அத்தோடு மாவட்டத்தின் மேச்சற்தரை மற்றும் மகாவலி தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் அவற்றிற்கான தீர்வினை பெற்றுக்கொடுப்பதற்கான ஆலோசனைகளை அதிகாரிகளுக்கு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர், ஒருங்கிணைப்பு குழுவின் இணைத்தலைவர் மற்றும் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் உள்ளிட்டோரினால் இதன்போது வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது மயிலத்தமடு,மாதவனை மேய்ச்சல் தரைப்பகுதியில் கால்நடை பண்ணையாளர்கள் தொடர்ச்சியான பிரச்சினைகளை எதிர்கொண்டுவருவதாகவும் நீதிமன்றத்தினால் சட்ட விரோத குடியேற்றத்தினை மேற்கொண்டவர்களை வெளியேற்றுமாறு உத்தரவு பிறப்பித்துள்ள நிலையிலும் அந்த உத்தரவினை மகாவலி அபிவிருத்தி திணைக்களம் இதுவரையில் நடைமுறைப்படுத்தவில்லையென இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்தார். மகாவலி திணைக்களம் பாரபட்சமானமுறையில் செயற்படுவதாகவும் இதன்போது இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நீதிமன்ற உத்தரவு நிறைவேற்றப்பட்டிருக்குமானால் அப்பகுதியில் கால்நடைகள் உயிரிழக்கும் சம்பவங்கள் நடைபெற்றிருக்காது எனவும் அண்மையில் ஒரு தாய்ப்பசு இறைச்சிக்காக கொல்லப்பட்டு வயற்றிலிருந்த கன்றுக்குட்டியும் கொல்லப்பட்டிருந்ததாகவும் இதன்போது மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் சுட்டிக்காட்டினார்.

இதன்போது அனைவரது கருத்தினையும் கருத்தில்கொண்ட கிழக்கு மாகாண ஆளுனர் நீதிமன்ற கட்டளையினை அதிகாரிகள் அமுல்படுத்தவேண்டும் எனவும் இரண்டு வார காலத்திற்குள் குறித்த உத்தரவினை நிறைவேற்றுமாறும் கோரிய நிலையில் அதனை நிறைவேற்றுதாக மகாவலி திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைப் பகுதியில் கால்நடை பண்ணையாளர்களின் நன்மைகருதி பொலிஸ் காவலரன் அமைப்பதற்கு கடந்த மாவட்ட அபிவிருத்திக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோதிலும் அது தொடர்பில் நடவடிக்கையெடுக்கப்படவில்லையெனவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

4ம்பக்க தொடர்ச்சி (மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து...)

இந்த 4 கோடி லீட்டர் தண்ணீரில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 3 கோடியே 20 லட்சம் லீட்டர் தேவைப்படுகின்றது இவற்றில் பார்க்கும் பொழுது 45 வீதமான இடங்களுக்குதான் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டிருக்கின்றது இன்னமும் 55 வீதமான இடங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்க வேண்டும்.

எங்களுக்கு இரண்டு பிரச்சினைகள் காணப்படுகின்றது ஒன்று மக்கள் குடிநீர் இணைப்பினை கேட்கின்றார்கள் மற்றுமொன்று வரப்போகின்றது அடுத்த கட்டமாக உன்னிச்சையிலிருந்து எடுக்கப்படுகின்ற தண்ணீரின் அளவு மிகுதியாக உள்ள 55 விதமான இடங்களுக்கு இணைப்பினை வழங்கினால் போதாது.

இவற்றினை கருத்தில் கொண்டு நாங்கள் தற்பொழுது மிகப் பெரிய ஒரு செயற் திட்டத்தினை முன் வைத்திருக்கின்றோம் உறுகம், கித்துல் பகுதியில் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கு இல்லாவிடில் காரிய பிரச்சனைக்கு நாங்கள் எதிர் நோக்க வேண்டி நேரிடும்.

உறுகம் கித்துல் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை ஆரம்பிப்பதாயின் பல கோடி ரூபாக்கள் தேவை. அதனை ஆரம்பித்தால் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஒட்டுமொத்த குடிநீர் பிரச்சினைகளையும் தீர்க்க முடியும்.


இதேபோன்று மின்சாரத்தை எடுத்துக் கொண்டால் தற்போது மின் பட்டியலினை கட்ட முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது ஏனெனில் பட்டியல் அதிகரித்துள்ளது ஒருவரின் மாத சம்பளத்திற்கு ஏற்ற அளவிற்கு மின் பட்டியல் வருகின்றது இந்த நிலையில் அந்த குடும்பம் எவ்வாறு வாழ்வது.

மின்சார பிரச்சினையை தீர்க்க வேண்டும் ஆயின் சூரிய மின் உற்பத்தியினை கொண்டு வந்து நாங்கள் மின்னை உற்பத்தி செய்ய வேண்டும்.

தற்போது தென்கொரியாவில் இருந்து மட்டக்களப்பிற்கு ஒரு திட்டம் வந்திருக்கின்றது 1200 மில்லியன் அமெரிக்க டொலர்.இந்த செயல் திட்டத்தினை ஆரம்பிப்பது தொடர்பான விடயங்களை இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது அந்த காணி தொடர்பான கருத்துக்கள் மக்களுடைய வாழ்வாதார காணிகளும் இருப்பதனால் பாதிப்பில்லாத வகையில் ஆரம்பிக்க வேண்டும் என்கின்ற விடயம் பேசப்பட்டு கொண்டிருக்கின்றது.

ஒவ்வொரு துறைகள் சார்ந்து மக்களுக்கு பிரச்சினைகள் இருக்கின்றது விவசாயம், மீன்பிடி, மின்சாரம், குடிநீர் இணைப்பு, வாழ்வாதாரம், வீடமைப்பு சமூர்த்தி.

தற்பொழுது சமூர்த்தி பிரச்சினை நித்திரை கொள்ள முடியவில்லை ஏனெனில் மக்கள் பாவம் இந்தத் திட்டத்தினால் உண்மையாக பாதிக்கப்பட்ட வறுமை கோட்டின் கீழ் வாழ்கின்ற ஏழை மக்கள் விடுபட்டு இருக்கின்றது.



# இலங்கை தோற்றுப்போன அரசு!
## ஒப்புக்கொண்ட சந்திரிகா குமாரதுங்க!
## பாராட்டுகிறது நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்!



அரசின் கொடுங்குற்றங்களும் சிறிலங்கா அரசின் தோல்விக்கு அரைகுறைக் குற்ற ஒப்புதலே காரணம் என்பதைக் குறிப்பிடத்தவறியிருப்பதை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கையின் முன்னாள் அதிபர் சந்திரிகா 2023 ஏப்ரல் 16ஆம் நாள் யுனெஸ்கோ நல்லெண்ணத் தூதுவர் மதன்ஜீத் சிங் நினைவுச் சொற்பொழிவு ஆற்றுகையில் சொன்னார் “காலனியாதிக்க ஆட்சியாளர்களின் 450 ஆண்டுக் கால அழிவு வேலைக்குப் பிறகும் இலங்கை சில மிகச்சிறந்த சமூகப் பொருளியல் வளர்ச்சிக்குறியீடுகள் கொண்டதாக இருந்தது. இன்று 75 வயதில் இலங்கை அரசு தோற்றுப் போய் நிற்கிறது.”

குமாரதுங்கா அம்மையார் தமது உரையில் முன்னாள் சிங்கப்பூர் அதிபர் லீ குவான் யூ 1956ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்து சென்ற பிறகு கூறியதை மேற்கோளாகக் காட்டியது பொருத்தமானதே. அந்த நேரத்தில் பொதுநலவாய (காமன்வெல்த்) நாடாகிய இலங்கை புதிதாக அமைந்த சிங்கப்பூர் பின்பற்ற விரும்பியமுன்மாதிரி நாடாக விளங்கிற்று என்று லீ குவான் யூ கூறியிருந்தார்.

இலங்கையின் வீழ்ச்சிக்குத் தலைவர்களின் ஊழலே பெரிதும் காரணம் என்று சந்திரிகா அம்மையார் குற்றம்சுமத்தியுள்ளார். சுதந்திரத்தின் பின்னர் ஊழல் காரணமாக மோசமான ஆட்சி அமைந்தது என்று குறிப்பிட்டார் “ஒவ்வொரு நிலையிலும் பரவலான ஊழல்” என்பதே “இலங்கை அரசியலின் மூலமந்திரம்” ஆகி விட்டதுஎன்றும், அது நீதித்துறை, காவல்துறை, பொதுச் சேவைத்துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் புரையோடி விட்டது” என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் அதிபர்களும் பிரதமர்களும் கொண்ட குடும்பத்திலிருந்து வரும் சந்திரிகா அம்மையார் அடுத்தடுத்த சிறிலங்கா ஆட்சியாளர்களால் சிறுபான்மைச் சிக்கலைத் தீர்க்க இயலவில்லை என்பது நாடு தோற்றுப்போன அரசானதற்குரிய காரணங்களில் ஒன்றாகும் எனக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

“சுதந்திரம் பெற்ற இலங்கை வேறுபட்ட இன, மத சமுதாயங்களை ஒன்றுபட்ட பன்மைய அரசாக வார்த்தமைக்கத் தவறி விட்டது” என்று அவர் தமது இணையவழி உரையில் குறிப்பிட்டார்.

ஆனால், அடுத்தடுத்து வந்த இலங்கைத் தலைவர்களிடையில் தலைவிரித்தாடிய ஊழல் இலங்கை நாடுதோற்றுப்போன அரசாவதற்கு ஒரு காரணம் என்று சந்திரிகா அம்மையார் ஒப்புக்கொண்டிருப்பதை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பாராட்டும் அதேவேளையில், 1940களில் பிரித்தானியக் காலனியாட்சி முடிந்தபிறகு இலங்கைத் தீவில் தமிழர்கள் அடுதடுத்த ஆட்சிகளால் இரு வகையிலும் - மெய்வகையிலும் பண்பாட்டுவகையிலும் - இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என்ற உண்மையை அவர் ஏற்கத் தவறி இருப்பது ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் நிறுவனமயப்பட்ட பாகுபாடுகள் மிகப் பரவலாகவும், ஆழமாக வேரூன்றி இருப்பதே முதன்மைக் காரணம் என்பது வெளிப்படையாக அங்கீகரிக்கப்படவும், தவிர்க்கப்பட முடியாத உண்மை என்றும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

சந்திரிகா அம்மையாரின் உரையில் விடுபட்ட இன்னொரு குறிப்பிடத்தக்க செய்தி,

1956இல் இலங்கையின் பொருளியல் உள்ளாற்றல் பற்றிக் கூறிய முன்னாள் சிங்கப்பூர் அதிபர் லீ குவான் யூ.1966இல் இதையும் சொன்னார், தமிழர்கள் சுறுசுறுப்பானவர்கள், அறிவுநுட்பமிக்கவர்கள், கடின உழைப்பாளிகள், இதற்காகச்சிங்களப் பெரும்பான்மையால் தண்டிக்கப்பட்டுள்ளார்கள் என்றார்.

வல்லமை குறைந்த சிங்களவர்கள் வல்லமை கூடிய தமிழர்களை ஒடுக்குவதாகவும் லீ குவான் யூ சொன்னார். சுதந்திரம் பெற்றதிலிருந்து இலங்கைத் தீவில் தமிழர்களின் இன்னல்களின் சாரத்தை அதிபர் லீ குவான் யூ பிழிந்து கொடுத்து விட்டார். நன்குஅறியப்பட்ட அமெரிக்க அரசியல் சொல்லாட்சியில் கூறுவதானால் “இது சிங்களப் பேரினவாத முட்டாள்” இந்த மூலக் காரணத்திலிருந்துதான் மற்ற சிக்கல்கள் தோன்றுகின்றன.

இலங்கைத் தீவு சுதந்திரம் பெற்றவுடனே, சிங்கள அரசு உத்திசார் அரசியல் நகர்வு ஒன்றைச் செய்து, பத்துஇலட்சத்துக்கு மேற்பட்ட இந்திய வம்சாவளித் தமிழர்களின் வாக்குரிமையைப் பறித்தது. 1958ஆம் ஆண்டுதமிழர்களுக்கு எதிரான இனப்பாகுபாடு கொண்ட தனிச் சிங்களச் சட்டம் இயற்றப்பட்டது.

1972ஆம் ஆண்டுபல்கலைக்கழக மாணவர் சேர்க்கையில் பெரும்பான்மைச் சமூகத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காக தரப்படுத்தல் நுழைக்கப்பட்டது.

இது பல்வேறு நாடுகளில் சிறுபான்மையினருக்கு முக்கியத்துவம்கொடுப்பதற்காக நடைமுறைப் படுத்தப்பட்டு தரப்படுத்தலுக்கு நேர்கீழ் நடவடிக்கையாக அமைந்தது. 1972, 1978 ஆண்டுகளில் சிங்கள பௌத்தர்களின் மேலாண்மையை நிறுவனமயபப்டுத்தும் அரசமைப்புச் சட்டங்கள்இயற்றப்பட்டன, மூர்க்கமான நீண்ட படை நடவடிக்கைகளுடன் சேர்ந்து இவை யாவும் “சிங்களப் பேரினவாதத்தின்” வெளிப்பாடுகள ஆகும். இவற்றில் எதுவும் ஊழல் தொடர்பானதன்று.

இலங்கைத் தீவின் அரசியல் செயல்வழியில் **(Political process)** தமிழர்களுக்கு காத்திரமான பங்கேற்புஇருந்ததே இல்லை, இப்போதும் இல்லை என்பதைத்தான் மேலே தந்த எடுத்துக்காட்டுகள் அனைத்தும் காட்டுகின்றன.

சிறிலங்காவில் பொறுப்புக்கூறல் தொடர்பாக ஐ.நா பொதுச் செயலர் பான் கி-மூன் அமர்த்தியவல்லுநர் குழுவின் அறிக்கை 2011இல் வெளிவந்தது. அறிக்கையில், சிறிலங்காவின் பிரச்சனைக்கு மூலகாரணம் அரசியல் செயல் வழியில் இருந்து தமிழர்கள் விலக்கி வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற மெய் நடப்பு அல்லது புரிதல்தான் காரணம் என இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.நா பொதுச் சபைப் பேரவைத் தீர்மானம் 2625(1970) இன்று மரபு வழிச் சட்டமாக கருதப்படுகிறது. இந்தத்தீர்மானத்தின் படி, “மக்கள் அரசியல் செயல்வழியில் காத்திரமாக பங்கேற்க வாய்ப்பு மறுக்கபப்டும் போது, சுதந்திர அரசமைக்க அவர்களுக்கு உரிமை உண்டு” என்பது குறிப்பிடத்தக்கது.

கனடிய உச்ச நீதிமன்றமும் இதே நிலைப்பாட்டை எடுத்திருப்பதை குயூபெக்கின் ஒரு தலைப்பட்சமான சுதந்திர முடிவு குறித்த தீர்ப்பில் எடுத்திருப்பதைக் காணலாம்.

இலங்கை சுதந்திரம் பெற்றவுடனே, அரசு தமிழர் தாயகங்களில் குடியேற்றங்களை தொடங்கி விட்டது. அடுத்தடுத்து வந்த ஆட்சிகளிலும் அது தொடர்ந்தது. தமிழர் தாயகத்தில் தமிழர் அல்லாதவர்களைப்பெருக்கெடுக்கச் செய்யும் இந்த அரசாங்க மூலவுத்தி தற்போதைய பொருளியல் நெருக்கடிக் காலத்திலும் கூட தொடர்கிறது. 1948ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்கள்தொகை 1% இற்கும் குறைவாக இருந்தது, இன்று 29%ஆக உள்ளது. இது “சிங்களப் பேரினவாதத்தின்” இன்னொரு முகம்.

எவ்வகையான அதிகாரப் பகிர்வு உடன்பாடுகளையும் முறியடிக்க சிங்கள அரசு வேண்டுமென்றே செயல்கள்புரிவது பண்டா-செல்வா ஒப்பந்தத்திலிருந்து தொடங்கி, டட்லி-செல்வா ஒப்பந்தம், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்குமான அமைதிப் பேச்சு வார்த்தை, ஆழிப் பேரலைக்குப் பிறகான செயற்பொறிமுறை **(PTOMs)** ஆகியவற்றிலும் இதுவே தொடர்ந்தது. இது “சிங்களப் பேரினவாதத்தின்” இன்னொரு முகம்.

இந்திய - இலங்கை உடன்படிக்கை தொடர்பாக, தமிழ்த் தேசியத் தலைவர் மாண்புமிகு வேலுப்பிள்ளைபிரபாகரன் வரலாற்றுச் சிறப்புமிக்க 1987 சுதுமலை உரையில் சொன்னார். “சிங்களப் பேரினவாதப் பூதம்” இந்த உடன்படிக்கையை விழுங்கப் போகும் நாள் வெகு தொலைவில் இல்லை. தலைவரது தொலைநோக்கை என்னவென்பது?

கசப்பான உண்மை என்னவெனில், சிறிலங்கா அரசு தோற்றுப்போன அரசு மட்டுமல்ல, ‘மிலேச்சத்தனமான அரசும்’ **(Rogue State)** ஆகும். 1958 முதல் 2006 வரை, இலங்கைத் தீவில் 156க்கு மேற்பட்ட தமிழருக்கு எதிரான பேரினவாத இனவேட்டைகள் நடந்தன. இவையே 2009 முள்ளிவாய்க்காலில் உச்சம் கண்டன. இந்தப்பெரும் இனப்படுகொலை நிகழ்ந்து 14 ஆண்டுகள் கழிந்து விட்ட நிலையில் இன்று வரையிலும் கூட, இந்தக்கொடுங்குற்றங்களில் ஈடுபட்ட எவர் ஒருவரும் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை. இது “சிங்களப் பேரினவாதத்தின்” இன்னுமொரு முகம்.

நவாலி தேவாலயக் குண்டுவீச்சு, நாகர் கோவில் பள்ளிக் குண்டுவீச்சு இரண்டுமே மாண்புமிகு சந்திரிகா குமாரதுங்காவின் ஆட்சியில்தான் நடைபெற்றன. இந்தப் பெரும் படுகொலைகளில் ஈடுபட்ட படைத்தளபதிகளை அவர் தனிப்பட்ட முறையில் கடிந்து கொண்டார் என்று ஒரு செய்தி.

இந்தப் போர்க்குற்றங்களுக்கு முறைசார் பொறுப்புக்கூறல் செயல்வழியை கொண்டு வருவதற்கு அவர் விரும்பி இருப்பாரெனக் கருதக்கூடியதாக உள்ளது. ஆயினும் அவர் இவ்வாறு செய்யத் தவறியது அவரும் “சிங்களப் பேரினவாதத்தின்” விலங்குப் பிடியில் கைதியாகத்தான் இருந்தார் என்ற நியாயமான முடிவுக்கு இட்டுச் செல்கிறது.

கடந்த 1979 ஆன் ஆண்டு முதல் செயலாக்கப்பட்டு வரும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பன்னாட்டளவில் கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கிறது. இந்தச் சட்டம் அளவுமீறித் தமிழர்களைப் பாதிப்பதாக பயங்கரவாதத்தை எதிர்கொள்ளும் போது மனிதவுரிமைகளை மேம்படுத்துவதும் பாதுகாப்பதும் பற்றிய ஐ.நாசிறப்பு அறிக்கையாளர் திரு பென் எமெர்சன் விளக்கியுள்ளார். ஐநா மனிதவுரிமைக் குழுவில் இடம் பெற்றுள்ள 17 நீதிபதிகள் அண்மையில் சிறிலங்கா அரசுக்கு எதிராக ஏகமனதாய்த் தீர்ப்பு வழங்கியுள்ளனர்.

சித்திரவதைக்கு ஆளான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவருக்கு ஆதரவாக இத் தீர்ப்ப்புவழங்கப்பட்டது. சிறிலங்கா அதிகாரிகள் அவரைச் சித்திரவதை செய்ததில் அவருக்கு உறுப்பு முடக்கமும் பிறவகை நிரந்தர ஊறும் நேரிட்டன. பாதுகாப்பு தொடர்பான சந்தேக நபர்களை சித்திரவதை செய்வது சிறிலங்காவில் வழமை என மனித உரிமைகளுக்கான ஐ. நா ஆணையாளர் 2017 ஜூலை 18ஆம் நாள்வெளியிட்ட அறிக்கையை மனித உரிமைகளுக்கான நீதிபதிகள் தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்கள். இவையெல்லாம் “சிங்களப் பேரினவாதத்தின்” இன்னொரு முகம்.

ஐ.நா உள்ளக ஆய்வறிக்கையின்படி 30 ஆண்டுக் கால ஆயுத போரட்டத்தில், இறுதி ஆறு மாதக் காலத்தில்70 ஆயிரத்திற்கும் மேலான தமிழர்கள் உயிர் இழந்தது ஒரு “சிறுபான்மை” அல்ல அவர்கள் “ஒருதேசம்” என்பதை உலகம் அங்கீகரிக்க வேண்டும் என்பதற்காகவே ஆகும். முன்னாள் அதிபர் குமாரதுங்கா “சிறுபான்மை” என்ற சொல்லைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்தியிருப்பது “சிங்களப் பேரினவாதத்தின் ”இன்னொரு முகம். இது மிகவும் புண்படுத்தும் செயல். சிறிலங்கா ஒரு பல்லினப் பன்மைச் சமூகம் அன்று. அது ஆழப்பிரிந்து கிடக்கும் மக்கள் கட்டுமானம் ஆகும். “சிங்களப் பேரினவாதம்” சிறிலங்கா அரசையே விழுங்கிக் கொண்டிருக்கிறது, சிறிலங்கா ஒரு நாடாக தொடர்ந்து இருந்து வர “சிங்களப் பேரினவாதம்” இடந்தராது.

இறுதியாக, நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் சிங்கப்பூர் முன்னாள் அதிபர் லீ குவான் யூ-இடமிருந்து ஒருமேற்கோள் தந்து முடிக்க விரும்புகிறது. அதிபர் லீ குவான் யூ 1988 இல் கூறியதன்படி சிறிலங்கா மீண்டும் ஒருநாடாக சேராது.- என்றார்.



# சமூக சீர்திருத்தத்திற்காக பெரும்பங்காற்றிய ஆதம்லெப்பை ஹஸ்ரதின் மறைவு பேரிழப்பாகும் அம்பாறை ஜம்இயத்துல் உலமா அனுதாபம்




சன்மார்க்க வளர்ச்சிக்காகவும் சமூக சீர்திருத்தத்திற்காகவும் தியாக மனப்பாங்குடன் பெரும் பங்காற்றிய காத்தான்குடி ஜம்இயத்துல் உலமாவின் தலைவரும் மத்ரஸத்து ஷபீலுர் ரஷாத் அரபுக் கல்லூரியின் அதிபருமான மௌலவி பி.எம்.ஹனிபா (ஆதம்லெப்பை) ஹஸ்ரத் அவர்களின் மறைவு, சமூகத்திற்கு பேரிழப்பாகும் என்று அம்பாறை மாவட்ட ஜம்இயத்துல் உலமா தெரிவித்துள்ளது.

மாவட்ட ஜம்இயத்துல் உலமாவின் சார்பில் அதன் தலைவர் யூ.எல்.எம்.ஹாஷிம் மௌலவி, செயலாளர் ஏ.எல்.நாசிர்கனி மௌலவி ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது கிழக்கு மாகாணத்தின் மூத்த ஆலிம்களில் ஒருவரான ஆதம்லெப்பை ஹஸ்ரத் எப்போதும் தஃவாப் பணிக்கே முன்னுரிமை கொடுத்து வந்துள்ளார். அன்னாருடைய மார்க்க சொற்பொழிவுகள், மக்களின் உள்ளங்களை ஆழ ஊடுருவும் வகையில் உயிரோட்டமிக்கவையாக அமையப் பெற்றிருந்தன.

காத்தான்குடியிலுள்ள பலாஹ் அறபுக் கல்லூரி மற்றும் மர்கஸ் ஸபீலுர் ரஷாத் அறபுக் கல்லூரி என்பவற்றின் வளர்ச்சியிலும் அங்கிருந்து நூற்றுக்கணக்கான உலமாக்களை பிரசவிப்பதிலும் அன்னார் முன்னின்று உழைத்துள்ளார்.

மார்க்கக் கல்விக்காகவும் தஃவா எனும் இஸ்லாமிய பிரசாரப் பணிக்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்த ஒரு தலைசிறந்த சன்மார்க்க அறிஞராகத் திகழ்ந்த அன்னார் சமூக ஒற்றுமை, இன ஐக்கியம் மற்றும் சகவாழ்வை பலப்படுத்துகின்ற விடயங்களிலும் கரிசனையுடன் பங்காற்றி வந்திருக்கிறார். அன்னாரது இழப்பு சமூகத்தில் பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியிருக்கிறது- என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இளைஞர்கள் சபை வெற்றிக் கிண்ணம் : சம்பியனானது பாலமுனை அறபா விளையாட்டு கழகம்.



பாலமுனை இளைஞர்கள் சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற "இளைஞர்கள் சபை வெற்றிக் கிண்ணம்" க்கான போட்டியில் ஒலுவில் இலவன் ஸ்டார் அணியை வீழ்த்தி பாலமுனை அரபா விளையாட்டு கழகம் வெற்றி பெற்று இளைஞர்கள் சபை வெற்றிக்கிண்ண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

புள்ளிப்பட்டியலில் முதல் இரு இடங்களைப் பெற்ற பாலமுனை அல்- அரபா விளையாட்டு கழகம் மற்றும் ஒலுவில் இலவன் ஸ்டார் விளையாட்டு கழகம் ஆகிய அணிகள் இறுதிப் போட்டியிக்கு தகுதி பெற்றது.

நேற்று செவ்வாய்க்கிழமை (27) பாலமுனை பொதுமைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாலமுனை அல்- அரபா விளையாட்டு கழகம் நிர்ணயித்த ஐந்து ஓவர்கள் முடிவில் 05 விக்கட்டுக்களை மட்டும் இழந்து 65 ஓட்டங்களை பெற்றனர். 66 எனும் வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ஒலுவில் இலவன் ஸ்டார் விளையாட்டு கழகம் ஐந்து ஓவர்களையும் சந்திதித்து 04 விக்கட்டுக்களை இழந்து 64 ஓட்டங்களை பெற்றனர். 01 ஓட்ட வித்தியாசத்தில் பாலமுனை அரபா விளையாட்டு கழகம் வெற்றி பெற்றது.

இதில் வெற்றி பெற்ற அணிக்கு 30,000 ரூபாய் பணபரிசும் வெற்றி கிண்ணமும் வழங்கி வைக்கப்பட்டதுடன் இரண்டாவது இடத்தைப் பெற்ற ஒலுவில் இலவன் ஸ்டார் விளையாட்டு கழகத்திற்கு 15000 ரூபாய் பணபரிசும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் கலந்து கொண்டார். மேலும், அக்கறைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தலைவரும், அக்கறைப்பற்று மாநகரசபை உறுப்பினருமான எஸ்.எம். சபீஸ், அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் தவிசாளர் சட்டதரணி எம்.ஏ. அன்சில், அட்டாளைச்சேனை பிரதேச சபை உப தவிசாளர் எஸ்.எல்.எம். ஹனிபா உட்பட ஊர் முக்கியஸ்தர்கள், கல்விமான்கள், வீரர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.







# காட்டுப் பாதையில் ஆறு நாட்களும் ஆயிரம் அடியார்களுக்கு மூன்று வேளையும் உணவு! வரலாறு படைத்த சித்தர்கள் குரல் சங்கர் ஜி!









வரலாற்று சிறப்புமிக்க கதிர்காம கந்தன் ஆலய ஆடிவேல்விழா உற்சவத்திற்காக வரலாற்றில் முதல் தடவையாக மேற்கொள்ளப்பட்ட ஆயிரம் வேல்கள் தாங்கிய அடியார்களுடனான மாபெரும் வேல் யாத்திரையின்போது,

ஆறு நாட்களும் ஆயிரம் அடியார்களுக்கு மூன்று வேளையும் உணவு இலவசமாக வழங்கப்பட்டது.

திருமூலர் பெருமானின் அருளாசியுடன், சித்தர்களின் குரல் சிவசங்கர் குருஜியின் நேரடி வழி காட்டலின் கீழ் இந்த மாபெரும் வேல் யாத்திரை வேலோடுமலை முருகன் ஆலயத்தின் ஆதீனகர்த்தா முரக ஸ்ரீ தியாகராஜா ஆசிரியர் வேல்சாமியாக இருந்து வெற்றிகரமாக நடைபெற்றது.

பாதயாத்திரை மேற்கொள்ளப்பட்ட ஆறு நாட்களிலும் யாத்திரீகர்கள் அனைவருக்கும் மூன்று வேளை சாத்வீக உணவும், இரண்டு வேளை தேனீரும் இலவசமாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. வேல் யாத்திரை அடியார்கள் மட்டுமல்ல ஏனைய அடியார்களுக்கும் சுமார் 1500 யாத்திரீகர்களுக்கு வழங்கப்பட்டது. சித்தர்கள் குரல் அமைப்பின் நளபாகச் சக்கரவர்த்தி மதியண்ணா தலைமையிலான குழுவினர் சிறப்பாக அலுப்பில்லாமல் விருப்புடன் உணவு தயாரிப்பில் செயற்பட்டமை காணக்கூடியதாக இருந்தது. அனைத்து ஏற்பாடுகளும் சித்தர்களின் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், துணைத்தலைவர் மனோகரன் ஆகியோரின் நேரடி ஏற்பாட்டின் கீழ் வெற்றிகரமாக நடைபெற்றது.. வரலாற்றில் ஆறு நாட்களும் உணவளித்த நிகழ்வு இவ்வருடமே நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச அபாகஸ் போட்டியில் சாய்ந்தமருது மாணவிகள் மூவர் முதலிடம் பெற்று சாதனை







இந்தியாவில் நடைபெற்ற சர்வதேச அபாகஸ் போட்டியில் சாய்ந்தமருது தாறுல் இல்மு கல்வி நிலைய மாணவிகள் மூவர் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இலங்கையில் செயற்படும் ஐகேம் அபாகஸ் (ICAM Abacus) நிறுவனத்தின் 7ஆவது தேசிய அபாகஸ் போட்டியில் சித்தியடைந்த 44 மாணவரகள் மேற்படி சர்வதேச போட்டியில் இலங்கை சார்பில் பங்குபற்றியிருந்தனர். இவர்களுள் நால்வர் தாறுல் இல்மு கல்வி நிலைய மாணவர்களாவர். இவர்களில் ஜெளபர் பாத்திமா ரோஷினி, முஹ ம்மட் அனீஸ் பாத்திமா ஷிபாரா, காலிதீன் பாத்திமா லனா ஆகிய மூவரும் முதலிடம் பெற்று நாட்டிற்கும் அவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளுக்கும் தமது கல்வி நிலையத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர் என்று தாறுல் இல்மு கல்வி நிலைய நிர்வாகம் மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.







## வெளிவரும்

### தேசியம் வாராந்த பத்திரிகையின் விளம்பர விலைப்பட்டியல்

தேசியம் www.thesiyamnews.com THESIYAM තේසියම්

NEWSPAPER SIZES, RATE PER EDITION

### WEEKLY NEWSPAPER

| BLACK & WHITE ADVERTISEMENT | | COLOUR ADVERTISEMENT | |
|---|---|---|---|
| Front Page Top | 2000/= | Front Page Top | 4500/= |
| Front Page Bottom | 4000/= | Front Page Bottom | 6000/= |
| Back Quarter Page | 6000/= | Back Quarter Page | 8000/= |
| Back Half Page | 8000/= | Back Half Page | 10000/= |
| Back Full Page | 12000/= | Back Full Page | 22000/= |
| Inner Quarter Page | 3500/= | Inner Quarter Page | 5000/= |
| Inner Half Page | 6000/= | Inner Half Page | 8000/= |
| Inner Full Page | 10000/= | Inner Full Page | 15000/= |
| Inner Box Ad | 800/= | Inner Box Ad | 1200/= |

Tel : 021 222 7557 | +94 76 567 3339
E-mail : thesiyamnews@gmail.com
Web : www.thesiyamnews.com




இப்பத்திரிகை அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.